Abstract : HT - 03

# செகராசசேகர வைத்திய ஏட்டுச்சுவடிகளின் மீள் வாசிப்பின் அவசியம்

*சே. சிவசண்முகராஜா, க. சௌந்தரராஜன்
சித்தமருத்துவப் பிரிவு, யாழ் பல்கலைக்கழகம்
*ksrajan64@yahoo.com

தற்காலத்தில் வழக்கிலுள்ள ஈழத்துச் சித்த மருத்துவ நூல்களுள் மிகவும் பழமையானது செகராசசேகர வைத்திய நூலாகும். அது கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த செகராசசேகர மன்னன் காலத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஏட்டுச்சுவடிகளில் பாதுகாக்கப்பட்டு வந்த இந்நூலானது 1932 ஆம் ஆண்டு அச்சுவேலியைச் சேர்ந்த சா.தம்பிமுத்துப்பிள்ளை என்பவரால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. அந்நூலே எவ்விதமாறுதலுமின்றித் தற்போதும் பாவனையிலுள்ளது. ஆயினும் அந்நூலை ஒரு செம்பதிப்பு என்று கூறமுடியாதுள்ளது. மூலநூல் 4000 பாடல்களைக் கொண்டதாகக் கூறப்பட்டாலும் பதிப்பு நூலில் 1667 பாடல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. அதாவது அரைவாசிக்கும் குறைவானபாடல்களே அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளன. எனவே. பதிப்புநூலை ஒரு முழுமையான வைத்திய நூலாகக் கருத முடியாதுள்ளது. ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து. அச்சில் பதிப்பிக்கப்படாமல் விடுபட்டுப் போன பகுதிகளைக் கண்டறிந்து. பதிப்பு நூலைப் பூரணப்படுத்துவதன் மூலமும். மருத்துவப் பாடல்களுக்கு உரையும். விளக்கமும் எழுதிவெளியிடுவதன் மூலமும் மட்டுமே இந்நூலைச் சித்தமருத்துவத்துறைக்குப் பயனுள்ளதாகச் செய்யமுடியும். அந்தவகையில் செகராசசேகரவைத்தியம் சம்பந்தமான ஏட்டுச் சுவடிகளின் மீள்வாசிப்பானது பதிப்பு நூலைச் சீர்செய்வதில் அவசியமாகின்றது. இந்த ஆய்வின் நோக்கமும் அதுவேயாகும். ஏட்டுச்சுவடி ஆய்வின் முதற்கட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதான நூலகத்திலிருந்த 207 சுவடிகளில் தமிழ் வைத்தியத்திற்குரியனவாகக் காணப்பட்ட102 ஓலைச்சுவடிகள் ஆய்வுக்குட்படுத்தப் பட்டன. அவற்றுள் செகராசசேகர வைத்தியத்துக்குரியதாக முழுமையான ஏட்டுச்சுவடிகள் எதுவும் இருக்கவில்லை. ஆயினும். 29.102. 135. 169 என இலக்கமிடப்பட்டிருந்த ஓலைச்சுவடிகளில் செகராசசேகர வைத்தியத்தின் சில பகுதிகள் இடம்பெற்றிருந்தமை கண்டறியப்பட்டது. 29.169 இலக்க ஏட்டுச்சுவடிகள் செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம் என்றும்`. 135 ஆம் இலக்கச்சுவடி அமுதாகரம் - விடவைத்தியம் என்றும் பெயரிடப்பட்டிருந்தபோதிலும் 29. 169 இலக்கச்சுவடிகளில் சித்தராரூடம் - தெரிகவி. அமுதாகரம் ஆகிய நூல்களும் எழுதப்பட்டிருந்தன. 135 ஆம் இலக்க ஏட்டுச்சுவடியில் முதல் இரு செய்யுட்கள் செகராசசேகரம் சர்ப்ப சாஸ்திரத்துக்குரியனவாகவும் ஏனையவை அமுதாகரத்துக்குரியனவாகவும் காணப்பட்டன. சர்ப்பசாஸ்திரம் என்னும் பகுதி தம்பி முத்துப்பிள்ளையின் பதிப்பில் இடம்பெற்றில்லை. 102 ஆம் இலக்க ஓலைச்சுவடி பெயர் ஏதும் இடப்படாமலும் 88 பாடல்கள் கொண்டதாகவும் உள்ளது. அச்சுவடியில் குணபாடம். நாடிவிதி. மரணக்குறிகள் என்னும் மூன்று பகுதிகள் எழுதப்பட்டுள்ளன. அவை செகராசசேகரத்துக்குரியன என்பது பதிப்பு நூலுடன் ஒப்புநோக்கி ஆராய்ந்தபோது தெளிவாகியது. குணபாடம் என்னும் பகுதியில் 20 பாடல்களுள் பதிப்பு நூலுக்கும் அவற்றிற்குமிடையில் பாடபேதங்கள் அதிகம் காணப்படவில்லை. நாடிவிதியில் 46 பாடல்கள் ஏட்டுச்சுவடியில் உள்ளபோதிலும் 16 பாடல்கள் மட்டுமே பதிப்பு நூலிற் காணப்படுகின்றன. மரணக்குறி என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ள 22 பாடல்களில் எவையுமே அச்சுப்பதிப்பில் காணப்படவில்லை. இந்த ஆய்வின் மூலம் பதிப்பு நூலில் இடம்பெற்றிராத சர்ப்பசாஸ்திரம். மரணக்குறிகள் என்னும் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளதுடன் குணபாடம். நாடிவிதி என்னும் பகுதிகளிலுள்ள பாடல்களின் சில பாடபேதங்களும் கண்டறியப்பட்டுள்ளது. செகராசசேகரம் முழுமையான ஏட்டுச்சுவடி கிடைக்கும் பட்சத் தில் அல்லது செகராசசேகரம் சம்பந்தமாக அங்கொன்றும். இங்கொன்றுமாக எழுதப்பட்ட ஏட்டுச்சுவடிகளைத் தேடி ஆராய்வதன் மூலமே பதிப்பு நூலைப் பூரணப்படுத்திப் பயன்படுத்தமுடியும். அதற்கு இது போன்ற ஆய்வுகள் மேலும் தொடரப்பட வேண்டும்.

**திறவுச்சொற்கள்:** ஏட்டுச்சுவடி. செகராசசேகரம். செம்பதிப்பு. மூலநூல். பதிப்புநூல்



Scanned with CamScanner